செ.வெ.எண்:-56/2020 நாள்:22.04.2020

திண்டுக்கல் மாவட்டம்

# திண்டுக்கல் மாவட்டத்தில் பார்வையற்றோர் உட்பட 783 மாற்றுத்திறானாளிகள் மற்றும் 29 வெளிமாநில தொழிலாளர்களுக்கு அரிசி மற்றும் அத்தியாவசிப் பொருட்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

---

திண்டுக்கல் மாவட்டம் பல்வேறு பகுதிகளில் உள்ள 680 மாற்றுத்திறனாளிக்கும் மற்றும் அடியனூத்து ஊராட்சி பார்வையற்றோர் குடியிருப்பில் வசிக்கும் 103 பார்வையற்றோர்கள் அரிசி உட்பட அத்தியாவசியப் பொருட்களை இன்று (22.04.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கி தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கையாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் பொதுமக்கள் தங்களது அத்தியாவசிய தேவைகளுக்காக வெளியிடங்களுக்கு செல்வதை தவிர்க்கும் பொருட்டும், பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்திடும் வகையில் மாவட்ட நிர்வாகத்தால் பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திண்டுக்கல் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கும், அடியனூத்து ஊராட்சியில் உள்ள பார்வையற்றோர்கள் குடியிருப்பில் வசிக்கும் 103 பார்வையற்றோர்களுக்கும் அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் மாவட்டத்தின் நிர்வாகத்தின் மூலம் அவர்கள் வசிக்கும் இடங்களில் நேரடியாக சென்று வழங்கப்பட்டுள்ளது.

இதே போன்று, திண்டுக்கல், பழனி மற்றும் வேடசந்தூர் ஆகிய இடங்களில் வெளிமாநிலத்திருந்து ஐஸ் விற்பனை செய்வதற்காக வருகைப்புரிந்த உத்திரபிரதேசத்தை சேர்ந்த 23 வெளி மாநில தொழிலாளர்களுக்கும், கல்வி பயில்வதற்காக வந்த மணிப்பூரை சேர்ந்த 6 மாணவர்களுக்கும் அப்பகுதியில் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மூலம் அரிசி, மளிகை பொருட்கள் மற்றும் காய்கறிகள் ஆகிய அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டது.

மேலும், திண்டுக்கல் மாவட்டத்தில் ஆதரவற்றவர்களுக்கும், வறுமை கோட்டிற்கும் கீழ் உள்ளவர்களுக்கும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் சிறப்பு குழு அமைக்கப்பட்டு தேவையான அத்தியாவசிப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திரு.ராஜ்குமார், திண்டுக்கல் துணை ஆட்சியர் (பயிற்சி) திரு எஸ்.பிரபாகரன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.சாமிநாதன், வட்டாட்சியர்(திண்டுக்கல் கிழக்கு) திருமதி மீனாதேவி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**